| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 219/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சின்ன இருசான் | நாள் | 22.10.2021 |
| தகப்பனார் பெயர் | சுருட்டையன் (எ) பூவரசக்கவுண்டர் | | |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய தகப்பனார் சொத்தில் பங்கு வேண்டும் என கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் நினைவில் இல்லை. சர்வே எண் தெரியுமா என்றால் பதற்றத்தில் தெரியவில்லை. 2 ஏக்கர் 54 சென்ட் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து ஆதியில் என்னுடைய தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது. என்னுடைய தகப்பனார் விலைக்கு வாங்கிய சொத்தாகும். சுருட்டையன் (எ) பூவரசக்கவுண்டர் என்பது என்னுடைய தகப்பனார் பெயர். தாயார் பெயர் பச்சையம்மாள். என்னுடைய பெற்றோர்கள் இறந்துவிட்டனர். அவர்கள் 01.01.2003 ல் என்னுடைய தாயாரும், 01.01.2004 என்னுடைய தகப்பனாரும் இறந்துவிட்டனர். என்னுடன் பிறந்தவர்கள் 1 அண்ணன் மற்றும் தம்பி உள்ளார். அக்கா ஒருவரும், தங்கைகள் 4 பேரும் உள்ளனர். என்னுடைய 1 அண்ணனும், ஒரு தம்பியும், 2 தங்கைகளும் இறந்துவிட்டனர். வம்சாவழிப் பட்டியல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். என்னுடைய சகோதர, சகோதரிகள் எந்த தேதியில் இறந்தார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடன் பிறந்த பெண்மக்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். என்னுடைய சகோதரிகளுக்கு எவ்வளவு சீர்வரிசை கொடுத்துள்ளேன் என்பதை சத்தியப்பிரமாண வாக்குமூலம் மற்றும் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் என்னுடைய சகோதரர் மாணிக்கத்தின் வாரிசுகள் என்றால் ஆமாம். சின்னமுத்து என்னுடைய தம்பி. சின்னமுத்துவின் மனைவி பெயர் 4 ம் பிரதிவாதி வெள்ளையம்மாள் என்றால் ஆமாம். சின்னமுத்து மற்றும் வெள்ளையம்மாளுக்கு ராஜலிங்கம், சாந்தி, மணிகண்டன் ஆகியோர் வாரிசுகள் என்றால் ஆமாம். கூட்டுக்குடும்பம் என கூறியுள்ளதில் உறுப்பினர்கள் யார் யார் என்றால் எல்லோரும் தனித்தனியாக உள்ளனர். நல்லது கெட்டது என்றால் ஒன்று சேருவோம். மேற்கண்ட சங்கதியை வழக்குரையிலோ, சத்தியப்பிரமாண வாக்குமூலத்திலோ கூறியுள்ளேனா என்றால் வழக்கறிஞரை தான்

கேட்க வேண்டும். சின்னமுத்துவை மாணிக்கம் கொலை செய்துவிட்டார் என்பதை கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அந்த கொலை வழக்கின் வழக்கு எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு எந்த நீதிமன்றத்தில் எந்த வருடம் நடைபெற்றது என்றால் 01.06.1996 ல் சேலம் நீதிமன்றத்தில் நடைபெற்றது. எந்த நீதிமன்றம் என்பது எனக்கு தெரியாது.

பிரதிவாதிகள் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒப்பம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டூர்.